அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2025

# தமிழ் - ஆண்டு 8

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

தோழமை உணர்வுடன் ஒருவரோடு பழகும்போது, அங்கே குமுக நல்லிணக்கக் கருத்துகள் இலகுவாகக் கட்டியெழுப்பப்படுகின்றன. இவை பற்றி திருக்குறளில் உள்ள கள்ளாமை என்ற அதிகாரம் எடுத்துரைக்கிறது. தீவினைகளைத் தம் நெஞ்சால் கூட நினைப்பது குற்றமாகும். பிறரின் பொருளை அவரறியாமல் கவர்ந்து செல்ல எண்ணக்கூடாது. களவினால் உண்டான செல்வம், அளவு கடந்து வளர்வது போலத் தோன்றி, ஒன்றுமே இல்லாமல் அழிந்துவிடும். இவ்வாறாக, பிறர் பொருளைக் கவரும்போது ஒருவனுக்கு ஏற்படும் விருப்பம், அப்போது நன்மை பயப்பது போலத் தோன்றினாலும், பின்னால் தீராத துன்பத்தைக் கொடுக்கும். இவ்வாறு பிறருடைய பொருளைக் கவர்வதில் விருப்பமுடைய ஒருவர், நன்னெறியில் நிலைத்து நின்று வாழமாட்டார் எனத் திருக்குறள் கூறுகிறது.